**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**P201 மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'மொழிபெயர்ப்புக் கொள்கைகள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
2. 'Global Village' என்பதன் பொருள் யாது?
3. தருமொழியில் எழுந்த இலக்கியத்தை பொதுமொழியில் அதன் தன்மைக்கேற்ப மாற்றியமைப்பது எது?
4. 19–ம் நூற்றாண்டின் இலக்கிய உலகில் ஈடு இணையற்ற மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்தவர் யார்?
5. வீரமாரித்தாண்ட தேவரால் கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது?
6. முதன் முதல் வெளிவந்த கணித நூல் எது?
7. மொழிபெயர்ப்பின் மூதாதையராகக் கருதப்பட்டவர் யார்?
8. 'வீடும் வெளியும்' என்ற பெயரில் தாகூரின் நாவலை மொழிபெயர்த்தவர் யார்?
9. மொழிபெயர்ப்புப் படைப்புகளுக்காகவே உருவெடுத்த இதழ் எது?
10. கலைச்சொல்லுக்கென்று கோவையிலிருந்து வெளிவரும் இதழ் எது?
11. அரபு மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட கதைகள்?
12. உமர்கயாமின் ரூபாயத் என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
13. ஹோமருடைய ஒடிசி நூலை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?
14. 'கர்மபூமி' என்ற பிரேம்சந்த்தின் நாவல் தமிழில் எவ்வாறு வெளியாகியுள்ளது?
15. 'மொழிபெயர்ப்பியல் கொள்கைகள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பாளர் என்பவர் யார்?
2. இஸ்லாமிய மொழிபெயர்ப்புகள் யாவை?
3. மொழிபெயர்ப்பில் மொழிகளின் பங்கு குறித்து எழுதுக?
4. இலக்கிய மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
5. கலைச் சொல்லாக்கம் என்றால் என்ன?
6. தமிழில் மருத்துவ நூல்கள் குறிப்பு வரைக?
7. மொழியாக்கம் என்றால் என்ன?
8. வங்காள மொழிபெயர்ப்பின் சிறப்புகள் குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிறந்த மொழிபெயர்ப்பு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் இலக்கியங்களின் வளர்ச்சிப்படி நிலைகள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) மொழிபெயர்ப்புப் பணியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புக் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் இடர்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

**3.** (அ) மொழிபெயர்ப்பின் தன்மைக் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் பொருளும் நடையும் குறித்துக் கட்டுரை எழுதுக
.

✱✱ ✱